தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 நளி 5 (21 - 11 - 1982) விலை 65 காசு | இதழ் எண் : 3 | பகுதி 3

★ அமைச்சர்களைவிட விடுதலை வீரர்களே மதிக்கத்தக்கவர்கள் !

★ விடுதலை மறவர்களுக்கு வரலாறு உண்டு ! அமைச்சர்களுக்கு வரலாறு இல்லை !

தமிழினத்துக்கு வந்த அடிமைத்தனம் இன்னும் நீங்கிவிடவில்லை! மக்களுக்காகச் சிந்தித்தவர், வாழ்ந்தவர் பெரியார் ஒருவர்தாம்!

'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் பாவலரேறு வீறுரை !

சென்னை, நவம்பர்—7.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தி இதழாகிய "தமிழ் நிலம்" கிழமை இதழ் (Weekly) வெளியீட்டு விழா, 7—11—82 ஞாயிறு 4 மணியளவில் சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட நடுவண் நூலகக் சட்டிடத்தில் மிகச் சிறப்பாகவும் நிறைவாகவும் நடைபெற்றது.

இவ்விழாவில் உ த மு க. முதல்வர் பாவலரேறு அவர்கள் வீறுரையாற்றினர் அதுகள் வருமாறு :—

பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய இந்த விழாத் தலைவர், மதிப்புக்குரிய பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார் அவர்களே! அகவை முதிர்ந்தாலும் என் தமிழ்மொழி உணர்வு என்றும் இளமையாகவே இருக்கும் என்பதைச் சொல்லிலே, செயலிலே காட்டிக் கொண்டிருக்கின்ற மதிப்புக்குரிய ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்களே! இங்கே எனக்கு முன் பேசிய பெருமைக்குரிய இயக்குநர் ஆறு. அழகப்பனார் அவர்களே! கோவை மாவட்ட உ. த. மு. க. அமைப்பாளர் பேராசிரியர் கு. வெ. கி. ஆசான் அவர்களே! வழக்கறிஞர். கு. பத்மநாபன் அவர்களே! மற்றும் இங்கே குழுமியிருக்கின்ற சான்றோர்களே! பெரியோர்களே! உங்களிடையே உள்ளத்தோடு உள்ளமாக, உணர்வோடு உணர்வாக வந்து, இந்த விழாவில் சிறப்புச் செய்து கொண்டிருக்கின்ற, "கொள்கை மறவர்கள்" வள்ளுவன் அவர்களே! 'விடுதலைப் புலி' முகுந்தன் அவர்களே! அவர்களை இந்த நிலத்திலே, பெருமைக்குரிய வகையிலே புகழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் நெஞ்சங்களே! பெரியோர்களே! தாய்மார்களே! அன்பர்களே! இளைஞர்களே! உங்கள் அனைவர்க்கும் இந்த இனிய வெளியீட்டு விழா மாலைப் பொழுதிலே என் நெஞ்சு நிறைந்த வணக்கத்தையும் வாழ்த்தையும் கூறிக் கொண்டு, இந்த இயக்கத் தொடர்பாகவும், இந்த இதழ் தொடர்பாகவும் உங்களுக்கு சில கருத்துரைகளை கூறுவதற்கு விரும்புகின்றேன். அருள்கனிந்து இறுதி வரை மிகப் பொறுமையோடு இருக்க வேண்டிக் கொள்கின்றேன்.

பெரியோர்களே! இந்த விழாவிலே பேசுவார்கள் என்று அறிவிக்கப் பெற்றிருந்த நம்முடைய மாநில அமைச்சரவை உறுப்பினர், வேளாண்மைத்துறை அமைச்சர், **"காளிமுத்து"** அவர்கள், இதுவரை வராமல் இருந்தது எனக்கு வியப்பாக இல்லை! ஏனென்று சொன்னால், அமைச்சர்கள் பெரும்பாலும் எப்பொழுதும் அவ்வளவு எளிதாக வருவது இல்லை. ஆனால், அப்படி வராமல் இருப்பேன் என்கின்ற ஒரு சொல்லை, அவர்கள் முன்கூட்டியே, அவரை அழைக்கச் சென்றவரிடம் கூறியிருந்தால், அவரை இந்த அறிக்கையிலே நாங்கள் வெளிப்படுத்தியிருக்க மாட்டோம்! ஏனென்றால் அமைச்சர்களைவிட, ஆட்சியாளர்களைவிட, மக்களுக்கும் நாட்டுக்கும் தொண்டு செய்கின்ற, முகுந்தன் வள்ளுவன் போன்ற கொள்கை மறவர்களை, நான் மிகுதியாக, பாராட்டுகின்றவன்; மதிக்கின்றவன்! (கைத்தட்டல்) இந்த ஆட்சியாளர்களை, அமைச்சர்களை அந்த இடத்திலிருந்து இறக்கிவிடப் பெற்றால், நாளைக்கு அவர்களை மதிப்பவர்கள் யாரும் இருக்க முடியாது.

(5-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் பதவி, பாராட்டு நாடாத தொண்டுள்ளங்கள் அணிவகுக்க வேண்டும்!

★ வெள்ளையனிடமிருந்து அடிமை மீட்புப் பணியில் காந்தியடிகளுக்கு அமைந்த தொண்டர்கள் போல் தமிழின மீட்புப் பணியில் தமிழர்கள் ஈடுபட வேண்டும்!

"தமிழ் நிலம்" வெளியீட்டு விழாவில் பல்லடம் முத்துக்குமரனார் வீரஉரை!

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ஏடாக மலர்ந்துள்ள "தமிழ் நிலம்" வெளியீட்டு விழா, கடந்த 7—11—82 ஞாயிறன்று மாலை 4 மணியளவில் தேவநேயப் பாவாணர் நடுவண் நூலகக் கருத்தரங்கில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம், உ. த. மு. க. முதன்மைக்குழு உறுப்பினர், பல்லடம் முத்துக்குமரனார் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய, இவ்விழாவின் தலைவர் பன்மொழிப் புலவர் உயர்திரு. கா. அப்பாத்துரையார் அவர்களே, ஆட்சிமொழிக் காவலர் உயர்திரு. கீ. இராமலிங்கனார் அவர்களே, உ. த. மு. கழக முதல்வர் பாவலரேறு. பெருஞ்சித்திரனார் அவர்களே, மற்றுமுள்ள அறிஞர் பெருமக்களே, தமிழின மீட்புப் பணியில் தம்மை ஒப்படைத்துக்கொண்ட தமிழ் நெஞ்சங்களே, அனைவருக்கும் என் முதற்கண் வணக்கம்.

ஆரியத்தால் நசுக்குண்ட தமிழினம் தன்னை மீட்டுக் கொள்ளச் செய்த முயற்சிகள் திருவள்ளுவர் காலந்தொட்டு இன்னும் வெற்றி பெற்ற பாடில்லை. இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், அஃது இன்னும் கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்கித் திணறிக் கொண்டிருக்கின்ற நிலைதாம். பத்தாண்டுகளுக்கு மேலாக நம்மவரே, நம்மை ஆண்டு வந்தாலும் அறிவுத் துறையிலே நாம் இன்னும் முன்னணியில் இல்லை என்பதை வெட்கப்படாமல் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பெரியார் திரு. வி. க. நூற்றாண்டு விழாக்களை எத்தனை கல்லூரிகள், பள்ளிகள், அரசு அலுவலகங்கள் கொண்டாடின என்பதைக் கணக்கிட்டு, பாரதியார் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதில் அரசு எந்திரம் எவ்வளவு சுறுசுறுப்பு காட்டுகிறது என்பதைக் கணித்துப் பார்த்தாலும் சரி, அல்லது பல்கலைக் கழக, கல்லூரி, பள்ளி நூலகங்களில் காந்தியம் என்ற பேராலோ; கதை, பாடல் என்ற பேராலோ ஆரியச் சார்பான நூல்கள் எத்தனை இடம்பெற்றுள்ளன என்பதைக் கணக்கிட்டு நம் பெரியாரியல் நூல்கள், இதழ்கள் எத்தனை கல்வி நிலையங்களுக்குள் இடம் பெற்றிருக்கின்றன எனப் பார்ப்போமாயின் நான் சொல்ல வருகின்ற கசப்பான உண்மைகள் புலப்படும். இந்நிலை ஏன்?

நாம் ஆட்சி, பதவி, அதிகார நிலைகளில் காட்டிய அக்கறையில் பத்தில் ஒரு பங்காவது அறிவைப் பரப்புவதில், அறிஞர்களைப் புரப்பதில் கவனம் செலுத்தவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் ஓரளவிற்குத் தமிழுணர்வினைப் பெற்றுள்ள நிலைமையைத் தவிர, தமிழறிவினைப் பெற்றுள்ளோமா என்பது வினாக்குறி போடவேண்டிய நிலையில் உள்ளது. தமிழறிவே பரவாத நிலையில் தமிழ்ச் செயல் எங்கே நடைபெற வியலும்? செயல் என்றால் என்னவென்றே நம்மவர்க்குத் தெரிவதில்லை. தமிழ், தமிழினம் என்பவெல்லாம் இத்தகைய மேடைகளோடு சரி. இங்கிருந்து வீடுகளுக்குச் சென்றால் சாதி சமய உணர்ச்சிகளோடு தாம் நாம் வாழ்கிறோம்.

இவ்வேளையில் ஆரிய இனத்தாரின் செயல் திறனை, இனப்பற்றினை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. 'ஆரியன் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பான்' என்பது எவ்வளவு உண்மை! நான் 'தமிழ்ச் சிட்டு' இதழை ஒரு பள்ளி நூலகத்தில் போடுவதற்காக ஒரு தலைமையாசிரியரை அணுகினேன். அவர் 'அதற்கு (தமிழ்ச் சிட்டிற்கு)ப் பள்ளிக் கல்வி இயக்குநர் இசைவு இருக்கிறதா?' என்று கேட்டார். இல்லை எனவே திரும்ப வேண்டியதாயிற்று. 'துக்ளக்' இதழ் தொடங்கி, ஒரு மாதத்திலேயே அப்பள்ளி நூலகத்தில் கிடந்தது. அதெப்படி இயன்றது எனப் புலனாய்ந்தேன். 'ஆனந்த விகடன்' பற்றுச் சீட்டில், 'துக்ளக்' வாங்கப் பெற்றது. இத்தனைக்கும் அவர் ஒரு பத்தாம் பசலிப் பழமை விரும்பி. இருப்பினும், அவாள் இன முயற்சிக்கு யாரும் அணுகாமலே அவர் பரிவோடு வினையாற்றுகிறார். துணை நிற்கிறார். பயன் தருகிறார் கருத்துப் பரப்பலில் அவர்கள் அவ்வளவு விழிப்பாயிருக்கிறார்கள்.

'தென்மொழி', 'தமிழ்ச் சிட்'டினை அரசு நூலகங்களில் போட, நானும் இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் எத்தனை அமைச்சர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை, தமிழ் அதிகாரிகளைக் கண்டு வேண்டுகோள் அறிக்கையினைக் கொடுத்திருப்பேன்! ஊம்; அந்தந்த இடத்தில் கொடுக்கப் பெறுகின்ற உறுதி மொழியோடு சரி. அறிவு எங்கே மதிக்கப் பெற்றது? பாவாணரை உலகுக்கு எடுத்துக் காட்ட ''தென்மொழி'' எடுத்துக் கொண்ட முயற்சிகள் கொஞ்சமா? அவரை எடுத்துக் காட்டிய கட்டுரை, பாடல் எத்தனை? அவரே எழுதிக் கொடுத்த கட்டுரைகள் எத்தனை? பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களுக்குச் சம்பளம் குறைக்கப் பட்ட செய்தி கூடத் 'தென்மொழி'யின் வழியாக அறிந்துதானே துடித்துப் போனோம். எங்கே நாம் அறிவை மதித்தோம்? ஆன்ற அறிவு தானே ஒரு குடியை உயர்த்த வல்லது! எனவே தான், உ. த. மு. க. இந்த 'அறிவுப் பழங்களை' மதித்து, அவர்கள் கையால் இவ்விதழினை வெளியிடுவது பெரும்பேறு எனக் கருதுகின்றது. ஆரியர்கள் எவ்வளவு பெரிய பதவிக்கு போனாலும் அறிஞர்களை எவ்வளவு மதிக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். இவ்வறிஞர்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

—அடுத்து, ஒரு குடி உயர, நீள் வினை வேண்டும். தமிழினத் தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோள்! நாம் மேடையில் மட்டும் தமிழின அன்பை மழையாகப் பொழிந்து பயனில்லை. இப்பொழுது தமிழ், தமிழினம் என்பன, காலங்கடந்து (Out of Date) போன சொற்கள். அதனைப் பொதுமக்கள் பெரிதும் பொருட்படுத்துவதில்லை. எனவே, நாம் தூய தமிழ் என்பதை வெறும் சொற்களாகக் கருதாமல், தமிழியல் சார்ந்த சிறப்பியற் கூறுகள், எனக்கொண்டு வாழ்ந்துகாட்ட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் வெள்ளையனிடமிருந்து அடிமை மீட்புப் பணியில் காந்தியடிகளுக்கு அமைந்த தொண்டர்கள்போல் பாவலரேறுவிடம் தூய்மையான, பதவி, பாராட்டு நாடாத தொண்டுள்ளங்கள் அணிவகுக்க வேண்டும். போலிக் கட்சியாளர்களைப் பார்த்து மக்கள் சலித்துப்போய் விட்டார்கள்.

தமிழறிஞர்களே கூட மேடையிலே ஒன்றும், கீழே இறங்கிய பின் ஒன்றுமாகப் பேசுவதைக் கண்டு நான் அயர்ந்து போயிருக்கிறேன். உண்மை, அறிவு, ஆராய்ச்சி என்பதெல்லாம் வெறும் போலிப் புனைவுரைகள் தாமா? கற்றவரோ செந்தமிழால் காசு பணம் சேர்க்கின்றார். மெய்த் தொண்டர்களாகிய நாமும் அதனை அப்படியே விட்டுவிடுவதா? எனவே நம் பணி மிகக் கடுமையானது. வெறும் தலைகளைக் கணக்கிட்டுக் கட்சிவளர்ப்பதில் பயனில்லை! ஒவ்வொரு தொண்டரும் ஒவ்வொரு கிழமைக்கு ஒரு புதியவரைத் 'தமிழ் நிலப்' உறுப்பினராக்க முயன்று செய்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டும். இஃது இயலக்கூடிய பணியே! இதனைத் தவறாமல் செய்ய வேண்டும். நாங்கள் எம் வட்டாரத்திலுள்ள நண்பர்களின் துணையுடன் சென்ற இரண்டு கிழமைகளில் 50 'தமிழ் நில' ஆண்டு உறுப்பாண்மைகள் அரை ஆண்டு உறுப்பாண்மைகள் 'தமிழ்ச் சிட்டு' உறுப்பாண்மைகள் 'தென்மொழி' உறுப்பாண்மைகள் பெற முடிகின்றதெனில், நாம் ஒவ்வொருவரும் முயன்றால் ஆகாததில்லை. இதுவே ஆக்கமுறைச் செயல் என அறிய வேண்டுகிறோம்.

ஆங்கிலத் தமிழ் அகர முதலி வடிவில் அப்பாத்துரையாரும் 'ஆட்சித் துறைத் தமிழ்' வடிவில், இராமலிங்கனாரும் நம் ஒவ்வொருவர் கையிலும் மிசையிலும் தவறாது இடம் பெற வேண்டும். விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்கையில், இதுவே நாம் செய்யவேண்டிய பணியென்பதைக் குறிப்பிட்டு விடை பெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

"தென்மொழி"

சென்னை—5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ் ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம்	8 உருபா	18 உருபா	18 உருபா
தனியிதழ்	1.25 உருபா	3 உருபா	3 உருபா

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

அமைச்சர் 'தென் மொழி' சென்னை—5.

தொடர் : 3

தொடர்... எண்ணி வழாவிருந்தனர்.

தளை (கைது) செய்யப்பட்ட சங்கிலி மன்னன், கோவாவில் (இந்தியா) ஆட்சியில் இருந்த போர்த்துக்கேய மன்னன் ஆணையின் பேரில் கோவாவுக்குக் கொண்டு செல்லப் பட்டான். சங்கிலி மன்னனுடன் அரச குமரியும், அவன் உறவினர்கள் சிலரும், தளை செய்யப்பட்டு, கொண்டு செல்லப்பட்டனர். மன்னனை 1619-ஆம் ஆண்டில் தூக்கில் இட்டனர். தமிழீழம் முதன் முதலாக அயலாருக்கு அடிமைப்பட்டது. தமிழீழ, அரசைக் கைப்பற்றியதன் மூலம்-போர்த்துக்கேயத் தளபதி 'பிலிப் டி ஒலிவேரா' ஆட்சித் தலைமையை ஏற்றுக் கொண்டான். வாணிக நோக்குடன் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் இவ்வாறாக ஆட்சி உரிமையை தமதாக்கிக் கொண்டனர்.

மூன்று பெரும் அரசுகள்

இந்தியத் துணைக் கண்டத்திற்கு முதன் முதலில் கி. பி. 1495-ஆம் ஆண்டில் போர்த்துக் கேயரான 'வாசுகொட காமா' என்பவர் வந்திறங்கினார். இவரைத் தொடர்ந்து பல மேற்கத்தியர்கள் வரத் தொடங்கினர். போர்த்துக் கேயர் இலங்கைத் தீவுக்கு வந்திறங்கிய பொழுது - இலங்கையில் மூன்று அரசுகள் ஆட்சி செய்தன.

- நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு.
- கோட்டையைத் தலைநகராகக் கொண்ட கீழ்நாட்டு அரசு
- கண்டியைத் தலைநகராகக் கொண்ட மலைநாட்டரசு

போர்த்துக்கேயர் முதலில் கீழ் நாட்டுச் சிங்கள அரசை கைப்பற்றிச் சிங்கள அரசப் படைகளின் உதவியுடன் யாழ்ப்பாணத் தமிழீழ அரசைக் கைப்பற்றினார்கள். யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கேயர் கைப்பற்றியிருந்த வேளையிலும், வவுனியா, மற்றும் தீவின் கிழக்குப்பகுதியில் இருந்த தமிழ் அரசுகளை (சிற்றரசுகள்) கைப்பற்ற முடியவில்லை. வடக்கே முள்ளியவளையைத் தலைமையாகக் கொண்ட வன்னி அரசும், கிழக்கே கொட்டியாற்றுப் பற்று அரசு, பாணமை அரசு, பழுகாமம் அரசு, ஆகிய நான்கு அரசுகளும் போர்த்துக்கேயரை எதிர்த்துத் தன்னாட்சி நடத்தி வந்தன. இந் நான்கு அரசுகளிலும், வன்னி அரசு மிக வலுவுள்ள அரசாகத் தன்னாட்சிச் செலுத்தி வந்தது. வன்னி அரசு, கண்டி அரசின் மேலாண்மையையோ. போர்த்துக்கேயரின் வல்லாண்மை ஏற்றுக் கொள்ளவில்லை. எந்த அரசுக்கும் திறை கொடுக்கவுமில்லை. எந்த அரசினது பாதுகாப்பையும் நாடவில்லை, மக்களை நம்பினர், மக்களின் உழைப்பிலே வளம் பெற்றனர். அவர்கள் வீரத்திலும், நாட்டுப் பற்றிலும் நம்பிக்கை வைத்தனர். 'எனவே நான் அவர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதி'அடங்காப்பற்று' எனப்பெயர் பெற்றது. இவர்கள் எந்தச் சிங்கள அரசிடமும் நாட்டின் முன்னேற்றத்திற்கோ (அபிவிருத்திக்கு) படை வலிவிற்கோ கையேந்தி நிற்கவில்லை. எனவே 'வன்னி' மாவட்ட மக்களின் தனித்தன்மை அன்று தொட்டு இன்று வரை, மாறாதிருக்கக் காண்கிறோம்.

தமிழ் நாட்டில், பாண்டியரின் ஆட்சி கி. பி. 1327-இல் வீழ்ச்சியுற்றது. தமிழீழத்தில் மட்டுமே தமிழரசர்களின் ஆட்சி நீடித்தது. போர்த்துக்கேயர் இலங்கைத்தீவை வந்தடைந்த காலம்முதல், சங்கிலி மன்னன் தூக்கில் இடப்படும் வரை;

- காசி நயினார்,
- பெரியபிள்ளை,
- புவிராசபண்டாரம்
- பரராச சேகரன்,
- அரசகேசரிப் பண்டாரம்,

எனும் அரசர்கள் முறையே யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்து வந்தனர்.

ஒல்லாந்தர் வருகை (DUTCH)

இவர்களும், வாணிக நோக்குடன் இலங்கைத் தீவை வந்தடைந்தவர்களே. காராம்பூ, ஏலம், கறுவா போன்ற மணப்பொருள்களை (வாசனைத் திரவியங்களை)ப் பெரிய அளவில் ஏற்றுமதி செய்ய வந்தவர்கள் படிப்படியாகத் தீவின் ஆட்சியுரிமையில் தலையிட்டனர்.

பதினான்காம் நூற்றாண்டில் தமிழீழ மன்னர்கள் செல்வம் செழித்தவர்களாகவும், படைவலி மிக்கவர்களாகவும் ஆட்சி செய்து வந்தனர். இதை நேரில் கண்ட மேல்நாட்டு அறிஞரும், பல நாடுகள் சென்று வழிச்செலவு (பயண)க் கட்டுரை எழுதியவருமாகிய இபன் பதூதா (IBN BATTUTA) என்பவர், கி.பி. 1344-ஆம் ஆண்டில் 'தமிழீழ மன்னனுடைய நூற்றுக்கும் மேலான கப்பல்கள் கூட்டமாக அராபிய நாடுகட்குப் பொருட்களை ஏற்றிச் சென்றனவாகவும்; அக்கப்பல்கள் போர்க்காலங்களில், போர்ப்படைக் கப்பல்களாகும் தன்மை கொண்டவை'' யென்றும் தமது வழிச்செலவுக் (பயணக்) கட்டுரையில் எழுதியுள்ளார்.

-'முகுந்தன்'

தமிழிசையை இழிவுப் படுத்துவதா?

-பாவலரேறு கண்டனம்

அருமையும், காலங்காலமாக வளர்ந்த ஒழுங்கும் நிரம்பிய, பழந்தமிழின் இசைச் சிறப்பையும் பெருமையையும் நாம் அனைவரும் அறிவோம்! உள்ளத்திற்கும் உணர்வுக்கும், - இதமும் இனிமையும் தருவது தமிழிசை! அதன் சிறப்பையும் வளத்தையும் அண்மையில் காலஞ்சென்ற பண்ணாராய்ச்சியாளர் ப. சுந்தரேசனார் போன்ற தமிழிசை அறிஞர்கள், இசையாலும், உரையாலும் நமக்குச் சிறப்பாக விளக்கியிருக்கின்றார்கள்! அவற்றைக் கேட்டு, சுவைத்து, உண்மை தெரிந்து, நரம் மகிழ்ந்தோம்!

தமிழிசையின் திறத்தையும் நுட்பத்தையும் இந்த நாட்டில் உள்ள பெரும்பாலான இசையாசிரியர்களும், ஈடுபாட்டாளர்களும், நன்றாக அறிவார்கள்! ஆனால், கடைப்பிடிக்கப் பெறுவது எது? பரப்பப் பெறுவது எது? பொய்யும் போலியுமான ஆரவார இசை வகைகள் தாமே, எங்கும் கொம்மாளம் போடுவதைப் பார்க்கின்றோம்!

குறிப்பாக, வானொலியிலும், தொலைக் காட்சியிலும் இசை நிகழ்ச்சிகள் என்ற பெயரில் இன்று அடிக்கப் பெறும் கொட்டங்களை நாளும் நாம் கேட்கிறோம்! பார்க்கிறோம்! அவை தமிழிசையை ,மறக்கடிக்கப் பண்ணுவதும், மறைக்க முயலுவதும் ஆன வஞ்சனைத் திட்டங்களாக அல்லவா தோன்றுகின்றன!

இசை நிகழ்ச்சி நேரங்களில் தமிழிசை என்ற பெயரில் தமிழிசைக்கு மாறான, கோணல்மாணலான வலிப்பு இழுப்புகளைத் தாமே பரப்பு கிறார்கள்! பெரும்பாலும் பார்ப்பனப் பாடகர்களால் தாமே,அவை நீட்டி முழக்கப் பெறுகின்றன! அதுவும் மணிக்கணக்கில்! 'கருநாடக 'சங்கீதம்' என்ற பெயரில் தெலுங்குக் கீர்த்தனங்களையல்லவா இழுத்து வலிக்கின்றார்கள்! இந்நிகழ்ச்சிகளுக்காக அவர்கள் வாரிச் சுருட்டிக் கொள்ளும் பணமோ' மிக ஏராளம்!

திரைப்படப் பாடல்களை ஒலிபரப்பும்போது கூட, ''டப்பாங்குத்து'' ''கும்மாங்குத்து'' செக்சுப் பாடல்களையே பரப்புகின்றார்கள்! தமிழிசையை இழிவுப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்துடன்தான், இப்படிச் செய்கின்றார்கள்! எவ்வளவு சூழ்ச்சி இது! தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டே தமிழர்களுக்கு இப்படியா இரண்டகம் (துரோகம்) செய்வது?

தமிழுணர்வு நிறைந்தவர்கள், அவர்களின் இவ்வகையான சூழ்ச்சிகளைப் படிப்படியாக உணர்ந்துகொண்டு தாம் வருகின்றார்கள். வானொலியிலும் தொலைக் காட்சியிலும அமர்ந்துள்ள பார்ப்பனர்கள் தமிழிசை அறிஞர்களை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றார்கள்! அவர்களின் 'அத்திம்பேர் அம்மாமிக் கூட்டம்', அவ்விடங்களில், இசை நிகழ்ச்சி என்ற பெயரில் கூடிக் கொம்மாளம் அடிக்கின்றது! தமிழிசையைக் கரவாகவும் சூழ்ச்சியாகவும் மறைக்கின்ற, திட்டமிடப் பெற்ற செயல்களே அவை!

அவற்றை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்! மேலும் இந்நிலை நீடிக்குமாயின், அதைக் கண்டிக்கும் வகையில் ஒரு பெரிய போராட்டத்தை, வானொலி தொலைக்காட்சி நிலையங்களின் முன்னால் உ.த.மு.க. நடத்தும்—என்று, அண்மையில் நேருரையொன்றில் பாவலரேறு ஐயா அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்தார்கள்.

உங்கள் ஊரில் "தமிழ் நிலம்"

உங்கள் ஊரில் 'தமிழ் நிலம்' கிடைக்கவில்லையா? அது கிடைக்கும்படி நீங்கள் ஏன் முயற்சி செய்யக் கூடாது? உங்கள் ஊர் செய்தித் தாள் விற்பனையாளரிடம் அதை வரவழைக்கச் செய்யுங்கள். இல்லையானால் நீங்களே வரவழைத்து அன்பர்களுக்குத் தரலாமே! 10 உருபாய் அனுப்புங்கள். இருபது படிகளை (Copies) அனுப்புகிறோம். ஒன்று 65 காசுக்கு விற்று மிகுதிக் காசை உங்கள் செலவுகளுக்கு ஈடு கட்டிக் கொள்ளுங்கள்! அதுபற்றி இன்றே எண்ணிப் பாருங்கள்.

ஓர் அன்புள்ளத்தின் கவலை!

உடல் வலிமை தங்களுக்கு அமைந்தாக வேண்டுமே!

உ. த. மு. க. முதல்வர் ஐயா அவர்களுக்கு,

மேலும் மேலும் பொறுப்புகளை வலிய ஏற்றுக் கொண்டு, தமிழ்க் குமுகாயத்திற்குத் தொண்டு செய்து வருகின்றீர்கள். இருக்கின்ற பொறுப்புகளின் தன்மைகளையும், இக்கால் புதிதாக ஏற்றுக் கொண்டுள்ள வினைக் கடுமைகளையும் எண்ணிப் பார்க்கின்ற போது, இவற்றையெல்லாம் தாங்குகின்ற உடல் வலிமை தங்களுக்கு அமைந்தாக வேண்டுமே, என்னும் கவலை என்னைப் பெரிதும் அச்சுறுத்துகின்றது. தங்களையன்றி வேறு யாரே இவற்றை ஏற்று நடத்த வல்லார்? தமிழ் நலங்காக்கும் பொருட்டாகிலும் தங்கள் உடல் நலத்தில் அக்கறை கொள்ளுங்கள்.

—மு. குமரிச்செல்வன்
செயலர், உ.த.மு.க.
குமரி மாவட்டம்

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 21-11-82—இதழ் எண்: 3 | பகுதி 3

மூடநம்பிக்கைக்கு ஆதரவு தரும் எந்தச்செயலும் பார்ப்பனியத்தை வளர்ப்பதே!

"'விளக்கு வரிசை' (தீபாவளி) விழா நாடெங்கும் பரவலாகக் கொண்டாடப்பெற்றது"—என்று வழக்கம் போல, பார்ப்பன வானொலி, தொலைக்காட்சி இரண்டும் வாய் கிழியப் பீற்றிக் கொண்டன. ஊரைக் கெடுத்து, ஏழை மக்களின் பணத்தை உறிஞ்சி வாழும் செய்தித் தாள்களும் பக்கந்தோறும் நடிக நடிகையரின் படங்களோடும், அவர்கள் பெயர்களொடு வெளியிட்ட கட்டுரைகளோடும் வெட்கங்கெட்ட முறையில் மலர்கள் வெளியிட்டு, ஊதியங்களை வாரிக் கொட்டிக் கொண்டன. மொத்தத்தில் மக்களிடையில் மூட நம்பிக்கைகளை வளர்த்துச் செழிக்க வைப்பதில், இந்த நாட்டு முதலாளிகளுக்கும் அவர்களின் அடிமைகளான பார்ப்பனியப் பாதந் தாங்கிகளுக்கும் மிகுந்த அக்கறை உண்டு.

'தீபாவளி'க் கொண்டாட்டம் முழுவதும் மூடநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட விழா. மொத்தத்தில் இந்த நாட்டில் கொண்டாடப்பெறும் பொங்கல் விழாவைத் தவிர்த்த பிற அனைத்து விழாக்களும் மூடநம்பிக்கைகளை அடிப்படையாக வைத்தே கொண்டாடப் பெறுகின்றன. அத்தனை விழாக்களும் பார்ப்பனியத்தை வளர்க்கும் ஆரியச் சேறு நிறைந்தவையே! அறிவியல் அல்லது குமுகாயவியல் தொடர்பான எந்த ஒரு செய்தியும் அவற்றில் மருந்துக்குக் கூட இல்லை மக்களை அறிவு வளர்ச்சியின் பக்கமே திரும்ப விடாமல் செய்யும் குருட்டுக் கொண்டாட்டங்கள் அவை! சிந்தனையின் மூடு விழாக்களே அவை! எந்த மானமுள்ள அரசும் இவ்வார்ப்பரிப்புக் கொண்டாட்டங்களுக்கு ஆதரவு தர விரும்பாது. நம்நாட்டு நடுவண் (தில்லி) அரசும், மாநில (அரைப்பார்ப்பன) அரசுந்தாம் மக்களை அறியாமையினின்று நீங்கிவிடாமல் செய்ய இவ்வாரவார விழாக்களுக்கு முழு ஆதரவு தந்து, அவற்றைக் காலங்காலமாகப் பாலூட்டி, நெய்யூற்றி வளர்த்து வருகிறது. மூடநம்பிக்கைக்கு ஆதரவு தரும் எந்தச் செயலும் பார்ப்பனீயத்தை வளர்ப்பதே!

இந்த நாட்டில் உள்ள பொதுவுடைமைக் கட்சிக் கோமாளிகளும் கூட இந்த விழாக்களுக்கு ஏராளமான ஆதரவை தந்து, தங்களின் கொள்கை இளிச்ச வாய்த்தனத்தைத் தொடர்ந்து நிலைநாட்டி வருகின்றனர். தீபாவளி போலும் மூட விழாக்களை எதிர்த்துப் பேசும் அல்லது எழுதும் எந்தப் பொதுவுடைமைக் கட்சித் தலைவரையும் இந்த நாட்டில் பார்கக முடியாது. மொத்தத்தில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி என்பது அரைப் பார்ப்பன, அரை மார்க்சீயக் கலவைக் கட்சியே! இந்த விழாக்களுக்கு எந்த அறிவியல் மக்களியல் காரணத்தையும் அக்கட்சி எடுத்துக் காட்டிவிட முடியாது.

எந்தக் கோணத்திலிருந்து கூட்டிப் பெருக்கிக் கழித்துப் பார்த்தாலும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியும்—அஃதாவது அரைப்பார்ப்பன அரை மார்க்சியக் கட்சியும், பார்ப்பனியமுமே தமிழ்நாட்டையும் தமிழினத்தையும் ஒரு விரற்கடையும் (அங்குலமும்) முன்னேற விடாமல் தடை போட்டு அறிவுச் சலவை செய்து, சீர்குலைத்து வருகின்றன.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியானது எந்த மக்கள் முன்னேற்றக் கூறையும் மார்க்சியம் என்றே பறைசாற்றுகிறது. இதனுடன் நெருங்கிய தொடர்புடைய பார்ப்பனியமோ அனைத்து அறிவு நிலைகளும் வேதவழிப் பட்டனவே என்று கூசாமல் நாணாமல் பொய்யுரைத்துக் கொட்டமடித்துக் காட்டுகிறது. இரண்டு இயக்கங்களுமே வேறு மாந்த, மக்களினச் சிந்தனைகளை ஒப்புக்கொள்வதில்லை இந்தத் தன்மையில் தான் இந்த நாட்டில், இந்த இருபெரும் ஆற்றல்களும் மக்களை அறிவாளுமை—அறிவாளிய முறையில் (இதுவும் ஒருவகை முதலாளியமே) மூளைச் சலவை செய்து தங்களுக்கு ஆதரவாக வைத்துக்கொள்ள விரும்புகின்றன!

(5-ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் நிலம்

சிறப்பாசிரியர் :

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தன்னரிய ஆசிரியர் குழு. (Hony. Editorial Board)

பொறுப்பாசிரியர் :

வினைவேந்தன், சென்னை-5.

உறுப்பாசிரியர் குழு :

1. 'தமிழம்' செம்பியன், சென்னை.
2. பாவலர். முல்லைவாணன், சிங்கை.
3. ந. முத்துக்குமரன், அறி.இ பல்லடம்.
4. இரா. ந. வீரப்பன், மலேசியா.
5. சொல்லாய்வறிஞர். ப. அருளி. வணி.இ.ச.இ., புதுவை.
6. கப். சுப்பிரமணியம், அந்தமான்.
7. மா. பூங்குன்றன், க.மு. சென்னை.
8. ப. மணிசேகரன், மே. செருமானி.
9. அ. பு. திருமாலன், மலேசியா.

புரப்பாசிரியர் குழு :

1. மா. ஆறுமுகம், பல்லடம். 2. பு. துரையரசன், திருப்பூர். 3 சுப திருமாறன், நெய்வேலி 4. நாரா. மகிழ்நன், திருச்சி. 5. கோ. உலங்கவரழகன், இராசிபுரம். 6 புலவர் கா. இ.முருகன், க மு பு, புளியம்பட்டி 7. நா இளமாறன், பவானி. 8 சோ. தமிழ்மகன், கோவை. 9. கு. மேழிவளவன், அ பள்ளிப்பட்டி 10 க. ஆகுன்றன், திருவள்ளூர் 11. புலவர். மு. ஆறுமுகம், க மு, சாத்தனூர். 12. பர். பொ இளங்கோ, ஈரோடு 13 இரா. இளம்பிறைச்செல்வன், (பாலகங்காதரன்) பொறி இ திருச்சி 14 மருத்துவர் ஆ விசுவநாதன், சின்னசேலம். 15 த கரிகாலன், கடையநல்லூர் 16 பாவலர் சா சி. சுப்பையா, ஈப்போ, மலேசியா 17 ச இறைவாணன், சிங்கப்பூர் 18 பாவலர் முத்துப்பாண்டியன்,. பேராக் மலேசியா 19 அ தங்கராசன், ஈப்போ, மலேசியா 20. க. சச்சிதானந்தன், தெல்லமன், ஏடன்.

கட்டுரையாசிரியர் குழு :

1. பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார், க. மு. சென்னை.
2. பேரா. கு.வெ.கி. ஆசான், க.மு. கோவை.
3. மெ. சிதம்பரனார், துணையாசிரியர், 'தமிழ்முரசு' சிங்கப்பூர்.
4. பண்டிதர். க. பொ. இரத்தினம், இலங்கை.
5. சிந்தனைச்செம்மல். கு. ச. ஆனந்தன், வணி. இ. ச. இ., கோபி.
6. ஆட்சிமொழிக்காவலர். கீ. இராமலிங்கனார், க.மு. சென்னை.
7. பேரா. பர். க. ப. அறவாணன், சென்னை.
8. பேரா. இல. க. இரத்தினவேலு. மதுரை.
9. ப. பத்மநாபன், க. மு. ச. இ. சோமனூர்.
10. புலவர். ச. சிவசங்கு, ஏரல்.
11. மருத்துவர். கோ. கோவிந்தனார், சென்னை.
12. புலவர். தி. நா. அறிவுஒளி, க. மு., திருக்கழுக்குன்றம்.
13. பேரா. ம. அரங்கசாமி, கோபிசெட்டிபாளையம்.
14. பர். தாயம்மாள் அறவாணன்., செனகல்.
15. பேரா. சதாசிவம், க. மு., ஈரோடு.
16. புலவர். பொதிகைச்செல்வன் க. மு.
17. அறிஞர். குணா, வெங்காலூர்,
18. கோ. மு. பெருமாள், அறி. இ. சென்னை.
19. சி. அரசிறைவன், அறி. இ., தஞ்சாவூர்.
20. செம்பியன் வல்லத்தரசு, சென்னை.
21. பாவலர். பெ. மணிவேலன் க. மு., அரூர்.
22. அ. தெ. தமிழநம்பி, விழுப்புரம்.
23. க. குழந்தைவேலன், க.மு. சென்னை.
24. பாவலர். கடலூர். மணிமாறன், க. மு. திருச்சி.
25. த. அன்பழகன், மஞ்சள் நீர் காயல்.
26. இரா. பாவாணன், புதுக்கோட்டை
27. தி. குமரப்பன், க. மு. மதுரை.
28. பாவலர். ம. நிறைவாணன், வேலூர்.
29. இரணியன், க. மு. கோவை.
30. பர். ஆறிறைவன், சென்னை.
31. 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, அறி. இ. பழனி.
32. உமாமகேசுவரன் (முகுந்தன்) இலங்கை.
33. மருத்துவர் சோ. இராசசுந்தரம், கொக்குவில், இலங்கை.
34. புலவர். நாவை-சிவம் மணப்பாறை
35. மாசி அண்ணாமலை, குவாலலம்பூர்.

செய்தியாசிரியர் குழு :

1. புலவர். பொன். முகிலன், கூவலூர். 2. கி இளஞ்சேரல் முதுபாண்டியன், மின்பாறை 3, ச சின்னத்துரை, நெய்வேலி. 4. தென்னவன்கோ, நெல்லை 5. ப. முருகவேள். சென்னை. 6. தமர. தன்னொளியன், பாகாயம். 7. மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை, 8. கோ. நக்கீரன், சோளிங்கபுரம். 9. ம. செ. தமிழ்மணி, நெமலி. 10. புலவர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம். 11. புலவர். இரா. தமிழ்வேந்தன், எழில், இறையூர். 12. புலவர். கு. அண்டிரன், சின்னச்சேலம். 13. பொற்செழியன், வெங்காலூர். 14. குழந்தை. ஈசுவரசன், திருச்சி. 15. த. தமிழ்த்தென்றல், தஞ்சை. 16. மு.பழ. சதாசிவம், சேலம். 17. அரங்க. தமிழ்மணி, கோவை. 18. க. தமிழப்பன், திருப்பூர். 19. செ. வ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி. 20. பால். இறையொளியன், தாராபுரம். 21. வி. சே. வேலிறையன், வி. க வலசு 22. நிலா. வேங்கடவன், ஈரோடு. 23. புலவர். இரா. சிவசண்முகம், முகவை. 24. தெ. சாலமகன்அரசு, விருதுநகர். 25. மு.பெ. பறம்பை அறிவன், பரமக்குடி. 26. கல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி. 27. சங்க. தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி. 28. புலவர். ந.இரா. தமிழவேள், நரசீபுரம். 29.கோ. ப. சீரங்கசாமி, கோவை. 30. திரு. தாமரைக்கோ, க. இ. முத்தரையர் பாளையம். 31. இரா அறிவின்பன், அந்தமான். 32. நா. தமிழவேள், பழங்கரை. 33. திரு. விழுப்பரையன், விழுப்புரம். 34. சி தமிழ்க்குமரன், கீரமங்கலம் 35. புலவர். தே. வே. சந்தானம், அரூர் 36 துரைமடங்கன், கோவை. 37 இரா கழராம்பன், திண்டுக்கல் 38 அ. தமிழன்பன், கடையநல்லூர். 39. மு. குமரிச்செல்வன், மணவாளக்குறிச்சி 40. தா. மு தமிழ்ப்பித்தன், குமரி. 41. மு. சிதம்பரநாதன், உதகமண்டலம். 42 சா. தங்கராசு, குவாகம் 43 புலவர். ஆ. முகிலன், சிதம்பரம். 44 மெய் அருள்மொழியன், பெருவயல். 45. புலவர். ஆ. பு. கலிங்கனார், தா. வாடிப்பட்டி. 46. அ. எழிலன்பன், கண்டராதித்தம் 47. புலவர். க தூக்கிய திருவடியார், உளுந்தூர்ப்பேட்டை. 48 அ. பெ வளர்தமிழ் அறிவன், பேட்டை வாய்த்தலை. 49. புலவர். ந. தமிழவேள், க.மு. திருக்கோயிலூர். 50. வி. திருவள்ளுவன் இராசத்தான். 51. க மு குணசேகரன், இரங்கூன். 52. செல்லையா, கலிபோர்னியா. 53 சி. கோபாலக்கிருட்டிணன், சவுதிஅரேபியா. 54. சு. சுப்பிரமணியன், அபுதாபி. 55. முரு. குழ. வீரசிங்கம், இலண்டன், 56. நாரண திருவிடச்செல்வன், மலேசியா. 57 ஈழவேந்தன், கொழும்பு 58 தியாகேசுவரன், பிரான்சு. 59.புட்பரதம், மொரிசியசு 60. எம். ஏ சுவாமி, மணிலா. 61. ந. சிவலிங்கம், கனடா. 62. சி. தியாகராசா, நார்த்விச் (U.S.A) 63. மு. சிரீராமலு, இந்தோனேசியா, 64 உமாகாந்தன், பாரிசு. 65. க. சின்னப்பன், டர்பன். 66. பாவலர். காசிதாசன், கோலாலம்பூர்.

விளம்பர ஆசிரியர் குழு :

1. சி. இன்மையவரம்பன், திருச்சி.
2. சோ. ஆற்றலரசு, சென்னை-5.
3. துரை-தென்னவன், சென்னை-19.
4. செ. கண்ணன், சென்னை-5.
5. சு. இளங்கோவன், திருச்சி.
6. அழ. இளமுருகன், சென்னை-5.
7. மா. பொழிலன், சென்னை-5.

ஓவிய ஆசிரியர் குழு :

1. ப. அறவாழி, உடுமலைப்பேட்டை, 2. வி. சின்னையன், சென்னை.

அமைச்சர்களிடம்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இது இவர்களுக்கு மட்டும் அன்று! இந்த இந்தியாவிலே இருக்கின்ற அமைச்சர்களுக்கும் ஒரு பொதுவான உண்மை! எனவே, அமைச்சர் வரவில்லை என்று எங்களுக்குக் கவலையில்லை. அவர் வந்தால் நல்லது! வராது போனால், அதைவிட மிக நல்லது. ஏனென்று சொன்னால், காளிமுத்தை நான் இங்கே வரவேண்டியது, அதாவது, அவர் வரவேண்டும் என்று விரும்பியது. — அவர் அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் அன்று. அவர் ஒரு தென்மொழி மாணவர்! தென்மொழியை விற்றலர்! அவர் படிக்கிற பொழுது, அவருடைய கல்லூரிக்கு நான் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தபோது, என்னையெல்லாம் அந்த இயங்கியில் இருந்து இறங்க விடாமல், தோள்களிலே தூக்கிக் கொண்டு போன மாணவர் அவர்! அந்த உணர்வு இருக்கிறதா என்று, அவரிடத்திலே நான் தொட்டுப் பார்த்தேன். ஒருவேளை, அது உணர்வாக இருக்கலாம்; இன்னும் செயலாக மலரவில்லை போல் இருக்கிறது! எனவே அவர் இங்கே ஒப்புக் கொண்டு இங்கு வராமல் இருந்தது வியப்பில்லை!

இன்னுஞ் சொன்னால், அமைச்சர்களாக இருப்பவர்கள், எப்பொழுதுமே தாங்களாகவே இயங்குகின்ற வழக்கம், இங்கே இல்லை! அது, தலைமையமைச்சர் என்ற கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று உண்டு! அந்த நிலையத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்தாம் அமைச்சர்களாக முடியும்! தலைமையமைச்சர்கள் கூட, தாங்களாகவே இயங்குகின்ற ஒரு நிலை இந்த நாட்டிலே இல்லை. அதாவது நான் சொல்வது, இங்கிருக்கின்ற மாநிலத்திலே தலைமையமைச்சர் முதல்வர், ஏனென்றால், அவருக்கும் ஒரு கட்டுப்பாட்டு நிலையம், தில்லியிலே இருக்கிறது. அங்கிருந்து இசைவு கிடைத்தால் தான் அவர் இங்கே எதாவது இயங்கமுடியும்! இப்படி இருக்கின்ற அதிகார வரம்புஎல்லை, இப்படியிருக்கின்ற ஆட்சி எல்லை, இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு மக்களிடத்திலே எதாவது நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் கொண்டிருப்பது மிகவும் அரிது. அப்படி எண்ணம் கொண்டால் அதைச் செயல் படுத்துவது மிகமிக அரிது! இப்படிப்பட்ட நாட்டிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், என்று உங்களுக்கு நினைவுறுத்திக் கொள்கின்றேன்!

பெரியோர்களே! ஏனோ தெரியவில்லை! நம்முடைய நாட்டு நிலைகள் அப்படிப் பட்ட சூழல்கள் இன்று நேற்று அன்று: இந்தத் தமிழனத்துக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இப்படிப்பட்ட ஒரு நிலை. தமிழனத்துக்கு உண்டு! இன்னும், அது தொடர்ந்து எத்தனை ஆண்டுகளுக்கு இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. அதுபற்றியெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். எந்த வகையான கட்டுப்பாடு இல்லாமலும், ஒருவகையான அடைப்பில்லாமலும், நம்முடைய மனத்தையும் அறிவையும் தாராளமாக, இந்த நேரத்தில் நாம் ஈடுபடுத்த வேண்டும். ஏனென்றால் தமிழினத்துக்குப் பலவகையான கட்டுப்பாடுகள் உண்டு. மதக் கட்டுப்பாடுகள், சாதிக் கட்டுப்பாடுகள், கட்சிக் கட்டுப்பாடுகள், செல்வக் கட்டுப்பாடுகள், பொருளியல் கட்டுப்பாடுகள் என்றவாறு பல வகையான கட்டுப்பாடுகள்! இந்த நிலையிலே, நாம் எதையாவது ஒன்றை வெளிப்படையாகச் சிந்திப்பது மிகக் கடினம். நம்முடைய சிந்தனை, எந்த வகையான ஒரு தொடர்புமில்லாமல் வரவில்லை. இந்தக்காலத்தில்இந்தநாட்டிலே எதாவது ஒன்றைத் தழுவியிருக்கும். சிந்திக்கிறான் என்று சொன்னால், அது அவனைத் தழுவியிருக்கும், முதலிலே; இல்லையானால், அவனுடைய குடும்பத்தைத் தழுவியிருக்கும்; அதுவும் இல்லையானால், அவனுடைய சாதியைத் தழுவியிருக்கும்; அதுவும் இல்லையானால் அவனுடைய கட்சியைத் தழுவியதாக இருக்கும். அதுவும் இல்லையானால், அவனுடைய மதத்தைத் தழுவியதாக இருக்கும்! மக்களைத் தழுவிய சிந்தனைகள், இன்னும் இந்த நாட்டிலே வளரவில்லை! அந்தச் சிந்தனைகளை ஊட்டுவதற்காகத் தான் தந்தை பெரியார் அவர்கள், கடந்த முக்கால் நூற்றாண்டாகப் பாடுபட்டார். அவருடைய சிந்தனை, எடுத்த எடுப்பிலேயே மக்களிடத்திலே, சென்றது! வேறு எந்தச் சக்தியிலோ, சேற்றிலோ போய் காலூன்றிக் கொள்ளவில்லை! அவருடைய அறிவு, மக்களைப் பற்றித் தான் எண்ணியது! அவருடைய உள்ளம் எப்பொழுதுமே மக்களைப் பற்றி கசிந்து கொண்டிருந்தது. அவருடைய உடல், மக்களுக்காகவே இயங்கிக் கொண்டிருந்தது! அப்படிப்பட்ட ஒரே ஒரு மக்கள் தலைவனைத் தான், நாம் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலே பெற்றோம். (கைதட்டல்).

நான் இதை எதற்காக உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்று சொன்னால், இந்த நாட்டிலே மக்களுக்கான தொண்டு இன்னும் முழுமை பெற்று விடவில்லை! அது துலங்கவில்லை! அவரவர்களுக்குரிய நிலையிலே தொண்டு நடைபெறுகின்றதே தவிர, மக்களை நோக்கிய தொண்டாக இன்னும் அது மலரவில்லை! எனவேதான், மக்களுக்கு உழைக்கின்றவர்கள் நமக்குத் தெரியாமல் இருக்கின்றார்கள்! இந்த வள்ளுவனையும், முகுந்தனையும் நாம் தெரிந்திருந்தால், அவர்களைச் சுற்றி ஒரு பெரிய இரும்பு வலை விசப் பெற்றிருக்காது. அவர் பேசுவதற்கு, காலையிலிருந்து இந்த நொடி நேரம் வரை முகுந்தனுக்குத் தடைமேல் தடைகள! நடுவண் அரசிலிருந்து, இங்கிருக்கின்ற காவல்துறை தலைமையில் இருந்து, கீழ்நிலைக் காவலர்கள் வரை அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

இந்த அரங்கம் நிறைந்திருக்கின்றது என்று நினைத்து நீங்கள் ஒருவேளை மகிழலாம். ஆனால், இந்த அரங்குக் குள்ளே மூன்றிலே ஒரு பகுதியினர் ஒற்றர்களாக இருப்பார்கள் என்று எனக்குத் தெரியும்! ஏனென்று சொன்னால், எங்கே எதுவும் நடந்து விடப் போகின்றதோ என்று அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள்! அப்படிப்பட்ட ஒரு நிலை தான், இந்த நாட்டிலே, காவல் என்ற நிலையில் இருக்கிறது. மக்களிடம் எதுவும் உண்மை பேசிவிடக் கூடாது; அதற்கு ஒரு காவல், மக்களுக்கு எதுவும் நன்மை சொல்லிவிடக் கூடாது; அதற்கு ஒரு காவல். மக்களுக்காக யாரும் எந்த அறிவும் ஊட்டிவிடக் கூடாது; அதற்கு ஒரு கட்டுப்பாடு! இப்படித் தான், இந்த நாட்டிலே காவல்நிலை செய்து வருகிறார்கள். எனவே, இந்த சூழ்நிலைகளிலே உண்மையை நாம் சொல்லவேண்டுமானால் ஒன்று, அவன் எதையுமே எதிர்பார்க்காதவனாக இருக்க வேண்டும்! இல்லையானால், உண்மையாகவே அவன் ஒரு பித்துப்பிடித்தவன், பைத்தியக்காரனாக இருக்க வேண்டும்! அவன்தான் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம்! மற்றபடி யார் சொன்னாலும், அவனை மிகவும் ஒரு கண்குத்தி பாம்பு போல பார்த்துக் கொண்டிருக்கும், இந்த அரசு. ஆனாலும், அதை நான் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறேன். எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன் என்றைக்காவது ஒரு நாள் அடங்க வேண்டிய மூச்சு, இந்த மூச்சு. என்றைக்காவது ஒரு நாள் மூட வேண்டிய கண், இந்தக் கண். அது வரை மக்களுக்கு அது தொடர்ந்து தொண்டு செய்யும். அவர்களைச் சிந்திக்கத் தூண்டும். அவர்களைச் செயலுக்குத் தூண்டும்! இது தான் என்னுடைய வேலை. அந்த வேலை, இன்று நேற்று அன்று, கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டது. எனவே, இந்த அரிய விழாவிலே இங்கு வந்து பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும், என்னுடையநெஞ்சுநிறைந்த வணக்கத்தையும், நன்றியையும் இந்த இடத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். (தொடரும்)

எழுத்தர்கள் தேவை!

தமிழ் நிலம் இதழ்ப் பணிகளை மேற்கொள்ள, தகுதியும் திறமையுமுள்ள எழுத்தர்கள் தேவைப்படுகின்றார்கள். விரும்புவோர், தாம் எதிர்பார்க்கும் சம்பளத் தொகையையும், பிற விளக்கங்களையும் குறித்து, உடனடியாகத் ''தமிழ் நிலம்'' இதழ் எழுதுக.

— அமைச்சர்.

மூட நம்பிக்கைக்கு ...

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றின் மூடக் கிறுக்கில்தான் தீபாவளி போலும் முட்டுத் தேசியப் போக்கிரித்தன விழாக்கள், இந்நாட்டில் வியத்தகு அறிவியல் வளர்ச்சியுற்ற இந்தக்காலத்திலும், மிக மிகத் தாராளமாகக் கொண்டாட வாய்ப்பளிக்கப்பட்டு வருகின்றன. மக்களும், தங்களின் ஏழ்மைத் தனத்தை மறந்து, அறியாமையை மறந்து, அடிமைத் தன்மையை அறவே மறந்து, கிடைக்கின்ற கொஞ்ச நஞ்ச காசுகளையும் பட்டாசாகக் கொளுத்தி நாட்டின் ஆக்கத்தைக் கரியாக்கி வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு எப்பொழுது-தான் வருமோ, தெரியாது!

தமிழினத்திற்கு மட்டும் ஒரு சொல்! இந்தியத் தேசியம் என்பது பார்ப்பனத் தேசியமே! பார்ப்பன ஆளுமை, வேத அதிகாரம், மனு நூல் சட்டம், 'இந்து' மதக் கோட்பாடு, மக்களின் மூடநம்பிக்கை — இவற்றை வலிவாகக் கட்டிக் காப்பதே தேசியம்! இத்தேசியத்தின் அடிப்படையில்தான் பலநூறு கோடி உருபாக்கள் மதவிழாக்களுக்குச் செலவிடப் படுகின்றன! பல நூறு கோடி உருபாக்கள் தேசியத் திருவிழாக்கள் என்னும் பெயரில் வாரியிறைக்கப் படுகின்றன! பல கோடி உருபாக்களில் விளையாட்டு வேடிக்கைகள், குதிரைப் பந்தயக் கொண்டாட்டங்கள் என்னும் பெயரில் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன! பல கோடி உருபாக்கள், கலைகள் திரைப்படங்கள் என்னும் பெயரில் காமக் களியாட்டங்களில் கரைக்கப்படுகின்றன!

நாட்டின் உண்மை நிலையோ பட்டை உரித்த மரம் போலப் பச்சையானது! எங்குப் பார்த்தாலும் ஏழ்மை! ஏழ்மை! ஏழ்மை! உடலொடியச் சாறுபிழியப்படும் பாட்டாளி மக்கள்! அவர்களின் எலும்புக் கூட்டுப் பரிலாரங்கள்! ஆமாம், அவர்களின் வாழ்விடங்களோ, குப்பை மேடுகள்! சந்தி சதுக்கங்கள்! சாய்க்கடை ஓரங்கள்! புழு, பூச்சிகள் நெளியும் புழக்கடைச் சேறு! உருப்படுமா இந்த நாடு?

திருத்திப் படிக்க...

3-ஆம் பக்கத்தில் 'தமிழிசையை இழிவுப்படுத்துவதா?'—என்பதை 'தமிழிசையை இழிவுபடுத்துவதா'? என்று திருத்திப் படிக்கவும்.

அன்பர்களுக்கோர் நல்வாய்ப்பு.
அனைவரும் தவறாமல் பங்கு பெறுக!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்
திருக்குறள்
தொடர் சொற்பொழிவு

சென்ற ஆண்டு சேலம் மாவட்டம், கோனேரிப் பட்டியில் நடைபெறுவதாயிருந்து, இடையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மனு எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றமையால் நின்று போன திருக்குறள் தொடர் சொற்பொழிவு, அடுத்து வரும் திசம்பர். 24-ஆம் பக்கல் தொடங்கி, 1983 சனவரி 2-ஆம் பக்கல் வரை 10 நாட்கள் பெரியார் வட்டம் பவானியில் பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பாக நடைபெற இருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். விரிவான அறிக்கை பின்னர் வெளியிடப் பெறும்.

முன்கூட்டியே விளக்கம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும்.

காவேரி மின்நகர் — அமைப்பாளர்
குதிரைக்கல்மேடு (அஞ்) — தென்மொழி
பவானி (வழி) — நா. இளமாறன்
639302 — இளம்பொறியாளர்

அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— அமைச்சர்

தமிழின வீழ்ச்சி வரலாறும் மீட்சி முயற்சிகளும்

சொல்லாய்வறிஞர்
ப. அருளி
வணி.இ; ச.இ:

ஒரு கருத்தைத் துலங்க வெளிப்படுத்தற்கு அருமையான அமைவுடைய மூதற் பழம்பெரு மொழியாக உலக மொழிகளுள்ளே தமிழே தகுதியும் தலைமையும் உடையதாயிருந்தது. அவற்றின் சிறப்புச் சாறங்களைக் கடைக்கழக இலக்கிய நூல்களில் மிகப் பரவலாகக் காணவியலும் !

பொருளைச் சுட்டும் சொற்களில் பெரும்பான்மையான-ஒலியளவையில் நனிமிகச் சுருக்கமான அமைப்புடையதாகிய அரிய வளமொழி, தமிழாகும் ! " அஞ்செஞ் சீறடி " (அகம் 389 : 7) எனும் ஒரு சிறு சொற்றொடரில் ஏழு எழுத்துகளே அமைந்திருக்க, அதனுள் " அழகிய சிவந்த சிறிய அடிகள் என்னும் நான்கு கருத்துப் பொருள்கள் செறிய நிறைந்திருப்பதைக்காணின், இந்த உண்மை விளங்குவதாகும். அதேபோல், **'சிறு கண்யானை நெடு நா ஒண் மணி'** (அகம் 24 : 13) என்னும் அகச் செய்யுளின் அளவடியொன்றில், பதின்மூன்று எழுத்துக்களே அமைந்திருக்க, அதனுள்ளாக " சிறிய கண்களையுடைய யானையின், நெடிய நாக்கையுடைய ஒளி பொருந்திய மணி" என்னும் ஏழு கருத்துப் பொருள்கள் குவியக் கொட்டிக் கிடப்பதையும் காணின், தமிழ் மொழியின் அழகொழுங்கும், நுணுக்க நுணுக்கமும் தெளியப் புலனாகும் ! இவை போன்ற அமைப்பின, தமிழ் மொழிக்கண் மிக ஏராளமாகும்!

நாட்டை அடிப்படையாகக்கொண்டு ஓரோரினத்தினர் கன்னடர் (கன்னடு), குடகர் (குடகு), மராட்டியர் (மகாராட்டிரம்) என்றவாறும்,—மக்கள் பெயரை அடிப்படையாகக் கொண்டு ஓரோரினத்தினர் மலையாளியர், ஆங்கிலேயர் (ஆங்லோ) என்றவாறும், -மொழியை அடிப்படையாகக் கொண்டு ஓரோரினத்தினர் தெலுங்கர், சீனர், ஜப்பானியர் என்றவாறும்,— ஓரோர் இனத்து மக்களும் பாகுபடுத்திச் சுட்டப் பெறுவர். ஆக, ஓர் இனத்தின் மக்கள் பெரும்பாலும் அவர்கள் பேசும் மொழியாலும், அல்லது வாழும் நாட்டாலும், இடத்தாலும் பெரும்பான்மையாகச் சுட்டப்பெறுவது உலக வழக்கமாகும். இவ்வகையில், நம்மினத்தவர் தமிழ் மொழியைப் பேசுவோராதலால் தமிழர், தமிழினத்தார் தமிழ்நாட்டார் என்றவாறு மொழிவழியே பெயர் பெற்றவராயினர்!

தமிழினம்! உலகத்தின் முதல் மாந்தன் உருவாகிய இனம்! உலகத்தில் முதன்முதலில் மொழி உருவாக்கிய இனம்! உலகத்தில் முதன் முதலில் பண்பாடும் நாகரிகமும் நிறைந்து வளர்ந்த இனம்! உலகம் துய்க்கும் அத்துணை அறிவு நலன்களுக்கும் மூல வித்துக்களை வழங்கிய மாப்பேரினம்! மறத்திற்கும் உரத்திற்கும் தலைசிறந்த இனம்! அன்பும் நண்பும் அணிந்து இலங்கிய எழிலார்ந்த இனம்! உலக இனத்தையெல்லாம் ஒன்றென அணைத்து மகிழ்ந்த, சிறந்த இனம்! நள்ளிருளில் புதைந்திருந்த உலகத்தின் பிற இனத்தவரின் உள்ளங்களிலும் இல்லங்களிலும் நாகரிகச் சுடரேற்றி ஒளிர்வித்த உயர்ந்த இனம்!

இன்றைக்கு, இத்தமிழினத்திற்கு வீழ்ச்சி எவ்வெவ்வகையில் ஏற்பட்டது, எவரெவரால் அது வீழ்த்தப்பட்டது. எந்தெந்தப்பொழுதில் அது நலிக்கப்பெற்றது, எங்கெங்கெல்லாம் அது தாழ்த்தப்பெற்றது என்று, பரக்க விளங்குமாறு வரலாறு எழுதப் பெறவேண்டிய அளவுக்கு, இத் தமிழினம் மிகமிகத் தாழ்ந்து தரைந்து, வீழ்ந்து ஆழ்ந்து, தேய்ந்து காய்ந்து கருவடைந்து உருநொடிந்து திருவிழந்து மாய்ந்து போகின்ற நிலையில் மயங்கி உயிர்த்து உலைவுற்று வலிவற்றுச் சாய்ந்து படுக்கையில் கிடக்கின்றது!

தமிழ் என்னும் மொழிப் பெயரும், தமிழன் என்னும் மொழிவழியான இனத்தவன் பெயரும், தமிழ்நாடு என்னும் மொழிவழியான நாட்டின் பெயரும், இங்கு ஏட்டிலும் பாட்டிலும், பலகையிலும், சுவரிலும், உரையிலும் தரையிலுமாக ஓரோரிடத்தில் தப்பித்தவறிப் பிதுங்கித் தோன்றுவதல்லாமல், தமிழனின் நெஞ்சில், தமிழனின் அறிவில், தமிழனின் உணர்வில் அணுவின் இம்மிக்கூறு அளவிலும் அது இல்லவேயில்லை! உள்ளப் பசையே காய்ந்து போயினமையால், செயலிலே ஈரம் இல்லாதவனாய் ஒவ்வொரு தமிழனும் தன்னலக் காற்றை உட்கொண்டு உயிர்த்தவாறு, நடைப்பிண விலங்காண்டியாய் உலவுகின்றான்! முன் கால்கள் இரண்டும் பிணித்துக் கட்டப்பெற்று, பின்னங் கால்களில் ஒன்று சூம்பியும் மற்றொன்று சுளுக்கும் கொண்ட நிலையில் பாரம் சுமந்து செல்லும் கிழக் கழுதை போல இடி நடையிட்டுக்கொண்டு, பெயருக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றான்!

இவனின் இன வரலாற்றின் பெரும் பகுதி,—வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட வரலாற்றில் பெரிய பெரிய அதிகாரங்களின் கீழ், மடைடலங்களின் கீழ் வரையிறந்து குறிக்கப் பெறவேண்டிய, அதேபொழ்து குறிக்கவியலாத, மடமடலான (Voluminous) செய்திகளால் அடங்கக்கூடியதாகும். காலச் சுழற்சியிலும் இயற்கை வளர்ப்பிப் போங்கு முன்றிலும் கரைந்தும் மறைந்தும் போன, பெரிய வரலாற்றுக்குச் சொந்தக்காரன் இவன்! மொத்தத்தில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மறைபுல வரலாறு முழுமையும் இவனுடையதே!

தமிழனின் இன வரலாற்றுத் தொடக்கம், உலக முதல் மாந்தனின் வாழ்க்கை வரலாற்றுத் தொடக்கமாகும் இன்னும் சொன்னால், மாந்தற் போலிகளான (Anthropoid) குரங்கு மாந்தன் (Pithecanthropus erectus), வனமாந்தன் (Ourang - Outang) ஆகிய நிலைகளின் இவனின் முன்னுயிரியோர் வாழ்ந்த காலத்தினின்றே, இவனின் வரலாறு தொடக்கம் கொண்டுவிட்டதாகும். எனினும், அவற்றை வடிவெடுத்துக் கிளத்தியலாக (Narrative) இன்று வரையிலே இயலாது !

அதுபோல், கி. மு, 50,000 ஆண்டுகட்கு முற்பட்ட இருவகைக் கற்காலங்கட்குப் பிற்பட்டும், — ஆரியரின் ஒரு பிரிவார் ஆக்சசு பள்ளத் தாக்கில் பாரசிகம் வழியாக வந்து தங்கி, பின் ஆப்கானித்தான வழியாகச் சிந்து வெளிப் பரப்பில் வந்து நின்று வதியத்தொடங்கிய, ஏறக்குறையமாக கி. மு 1500 ஆண்டளவிற்கு முற்பட்டும் - கழிந்து கடந்து சென்ற பல்லாண்டுக்கால இடைவெளியிலும் தமிழன் எவ்வெவ்வாறெல்லாம் வாழ்க்கையை நடத்தினன் என்பதும் அவ்வவ்வாறே விளக்கவியலாததாகும் !

கிளத்தியலாக வரிசையிட்டுக் காலநிரல்படித் தமிழனின் அக் கால வரலாற்றை வரையவியலாது ! பிற உலக இனத்தவரின் வரலாற்றுக்கான விளக்க முயற்சிகளும் இந்நிலையினவே ! உலகின் சில பகுதிகளில் அவ்வப் பகுதி இனத்தவரின் வாழ்வியல் தொடர்புடைய சில வரலாற்றுச் சான்றுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைத்திருப்பது உண்மையேயாயினும் அவற்றிலும் நிலையில்லை ! தொடர்ச்சியே யில்லை ! ஏனை இயன் முறையில் நிரப்பிக் காட்டப் பெற வேண்டிய படியே பிற இனங்களின் அத்துணை வரலாறுகளும் இழையறுந்து கிடக்கின்றன !; இடையிட்டு தொக்கினவாறு உலைந்து அலைகின்றன !

(—தொடரும்)

தமிழ் நிலம்

உ. த. மு க. செய்தியிதழ்

கிழமை வெளியீடு (Weekly)

சிறப்பாசிரியர் :

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

0 இஃது ஓர் உ. த. மு. க. வெளியீடு
0 சென்னையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியூர்களில் ஒவ்வொரு காரி(சனி)க் கிழமையும் கிடைக்கும்.
ஒவ்வோரிதழிலும்...
0 உ. த. மு. க செய்திகள்:
0 அரிய வரலாற்றுப் பொருளியல் கட்டுரைகள்:
0 மொழி, இன ஆராய்ச்சிக் கட்டுரைகள்:
0 இன, நாட்டு விடுதலை வரலாறுகள்:
0 கலை, இலக்கியச் செய்திகள், கதைகள்!
0 சூடான நடைமுறை அரசியல் திறனாய்வுகள்:
0 பிற சிறப்புச் செய்திகள்:
... அனைத்தும் இடம் பெறும்!
0 இதழின் அளவு ¼ டெம்மி, (16½"×11½")
0 விலை விளக்கம்:

தனியிதழ் 0.65 காசு

ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்)	18.00 உருபா
ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்)	36.00 உருபா

ஐந்தாண்டுக் கட்டணம்: 175.00 உருபா

ஓரிதழ்க்கு 4 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க!

அல்லது ஓரிதழ்க்கு 50 காசு மேனிக் கணக்கிட்டு, 20 படிகளுக்கும் அதற்கு மேலும், எத்தனைப் படிகள் வேண்டுமாயினும், அப் படிகளுக்குரிய தொகையை முன் பணமாக விடுத்து இதழ்களைப் பெற்றுக் கொள்க.

அமைச்சர்

தமிழ் நிலம்

5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

சொல்லும் பொருளும்

கருவாடு

வாடு—வலி, சாய, தளர்வுற, வெப்பத்தால் வதங்கு.

வாடுதல்—வலிதல், சாய்தல், மெலிதல், காய்ந்துபோதல் வெய்யிலிற் காய்வுறுதலால் வற்றிப்போதல்

வாடுன் = உப்புக் கண்டம்

விலங்கு பறவை மீன் போலும் உயிரிகளின் புலால் நிணத்தைத் துண்டுகளாக அறுத்து, அவற்றை வெய்யிலில் வற்றக் காய வைத்துத் தேவைக்குத் தகப் பயன்படுத்தும் வழக்கம் அக்காலத்தில் பரவலாக இருந்தது. நாகரிக முதிர்ச்சியில் மீனைத்தவிர பிற உயிரிகளின் புலால் துண்டங்களைக் காய வைத்து வற்றலாக்கிப் பயன்படுத்தும் வழக்கம் படிப்படியே மறைந்துவிட்டது. இன்றும் குறவர் போலும் நாடோடி இனத்தாரிடம் அவ்வழக்கம் நின்று நீடித் தொடர்ந்து வருவதைக் காணலாம்.

வெய்யிலிற் கருக வாடிய மீன் வற்றலைக் 'கருவாடு' என்றும், 'கரிவாடு' என்றும் வழங்கினர். இச்சொல்லாட்சிகள் தொடர்ந்து தொடர்கின்றன! 'கொழுமீன் குறைஇய துடிகண் துணியல்' (320) என்னும் மதுரைக்காஞ்சி வரிக்கு, 'கொழுவிய மீன்களை யறுத்த துடியின் கண் போலுருண்ட துணிகள் என்றது கருவாடுகளை', என்று நச்சினார்க்கினியர் உரை வரைவார்.

சொற்களும் அவற்றின் உட்குறிப்புகளும் (Words and their significance) என்னும் தம் நூலுள், 'கருவாடு' என்னும் சொல், 'Crevado' என்னும் போர்ச்சுக்கீசியச் சொல்லினின்று வந்திருக்கலாம் என்று குழப்பமுறுவார், திரு. இரா. பி. சேது அவர்கள். உண்மையில், 'Crevado' என்னும் போர்ச்சுக்கீசியச் சொல், கருவாடு என்னும் தூய தமிழ்ச் சொல்லின் திரிபே!

- ப. அருளி

அண்ணாவும் தம்பியும்

தமிழவேள்

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் எல்லாம் தமிழர்கள் கட்டியவை தாமே?

"ஆமாம்."

"அவற்றில் உள்ள சிலைகள் எல்லாம் கூடத் தமிழர்கள் செய்தவை தாமே?"

"ஆமாம்!"

"அந்தச் சிலைகளுக்கென்று செய்யப்பட்டுள்ள அணிமணிகளும் தமிழர்கள் செய்தவை தாமே ?"

"ஆமாம்."

"அந்தக் கோயில்களில் நாள்தோறும் பூசை நடைபெற நிலபுலன்களை எழுதிவைத்திருப்பவர்கள் எல்லாம் யார் அண்ணா?"

"அவர்களும் தமிழர்கள் தாம் !"

"அப்படியிருக்கக் கோயிலில் மூலவர் உள்ள இடத்திற்கு, அம்மூலவரைச் செய்தவர்கூடப் போகக் கூடாது, குறிப்பிட்ட ஒரு சாதியினரே போகலாம் என்பதும், வடமொழியில் 'அருச்சனை' செய்வதும் எதைக் காட்டுகிறது அண்ணா?"

'நீயே சொல் தம்பி!'

"தமிழர்கள் எல்லோரும் எவ்வளவு படித்தவர்களாயினும், செல்வம் உடையவர்களாயினும், ஒழுக்க சீலர்கள் ஆயினும், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினரை விடத் தாங்கள் தாழ்ந்தவர்கள், வடமொழியைவிடத் தமிழ் தாழ்ந்தது என்று எண்ணுகின்றவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தானே அண்ணா, அது காட்டுகிறது!?

'எனக்குத் தெரியாது தம்பி'

தாழ்த்தப்பட்டவர் தலைமைப்பதவிக்கு வரக்கூடாதா ?

தொலைக்காட்சி நிலையத்தில் சாதிவெறியைத் தூண்டும் சீனிவாசனின் கொடுமை!

அனைத்து இந்திய வானொலி தொலைக்காட்சி நிலைய தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் நலஉரிமை அமைப்பின் பொதுச் செயலாளர் திரு. இசக்கிமுத்து கண்டனம்!

சென்னை நவ-5 சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநராக திரு. சௌ-தேகர் (Sawdekar) என்ற, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் பணியாற்றி வருகிறார். இது, அங்குப் பணியாற்றும் திரு. சீனிவாசன் (C. G I I —போக்குவரத்துப் பிரிவு) என்பவருக்குப் பிடிக்கவில்லை. திரு. சௌதேகரைப் பற்றி, 'தாழ்த்தப்பட்ட வகுப்பிற்கான ஒதுக்கீட்டில் பணிக்கு வந்தவர்; திறமையற்றவர், இவர் தொடர்ந்து நிலையத்தில் பணியாற்றினால் நிலையத்தின் பெயரும் மதிப்பும் கெட்டுவிடும்' என்ற வாறுக நிலையப் பணியாளரும், பொதுமக்களும் கூடும் நிலையச் சிற்றுண்டிச்சாலையிலும், வரவேற்புக் கூடத்திலும் திரு. சீனிவாசன் என்பவர் மிகமிக இழிவாக அடிக்கடி பேசி வருகிறார்!

திரு. சீனிவாசனின் சாதி வெறியைத் தூண்டும் இந்தப் போக்கைக் கண்டு அனைத்து இந்திய வானொலி, தொலைக் காட்சி நிலையத் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் பிரிவு நலவுரிமை அமைப்பின் பொதுச் செயலாளர் திரு. இசக்கிமுத்து அவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

மேலும், திரு. சீனிவாசனின் மீது 'குடிஉரிமைப்பாதுகாப்புச் சட்டத்தின்' கீழ் (Protection of Civil Rights Act) நடவடிக்கை எடுக்க தா. ப. மக்கள் பிரிவு ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- ✱ முதுகெலும்பு ஒடிய பணிசெய்யும் கொத்தடிமைகளின் வரிப்பணத்தில் கும்மாளம்!
- ✱ ஆசிய விளையாட்டிற்கென கோடிக்கணக்கான பணம் இறைப்பு!
- ✱ முதலாளிய நகர்களில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மூன்று நாட்கள் விடுமுறை !!!

பாட்டாளிகளே சிந்தியுங்கள் !

நவ. 9—

தில்லியில், அடுத்த கிழமை நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிக்கென், கடந்த ஒரு திங்கள் முதற்கொண்டே செலவுக்கான பணி தொடங்கிவிட்டது. கோடிக் கணக்கான உருவாக்கள் செலவழித்து நடக்கவிருக்கும் அப்போட்டிகள் தொலைக் காட்சியில் காட்டப் பெறுவதைப் பார்ப்பதற்காகத் தமிழக அரசு, சென்னை - அதன் சுற்றுப் புறங்களிலுள்ள பள்ளி, கல்லூரிகளுக்கும், பிற அரசுகள் முகாமையான நகர்களில் உள்ள கல்வி நிலையங்களுக்கும் விடுமுறை விட்டுள்ளன.

முதுகெலும்பு ஒடிய, பணி செய்யும் பல்லாயிரக்கணக்கான பாட்டாளித் தோழர்கள் செலுத்தும் வரிப் பணத்தைப் பெற்று ஏப்பம் விடும் நடுவண், மாநில அரசுகள் நடத்தும் விளையாட்டுப் போட்டிக்கெனப்பலசெலவுத் திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. கேரளாவிலிருந்து பல யானைகள் தில்லிக்கு அனுப்பப் பெற்றுள்ளன. அன்றாடம் விளையாட்டு ஒத்திகை நடப்பதும், அவை தொலைக் காட்சிகளில் ஒளி பரப்புவதுமாக முதலாளியப் போக்குக்கு மட்டும் வழி வகுக்கும் நிலை இக்குடியரசு ஆட்சி என்று சொல்லப் பெறும் குடிகெடுக்கும் ஆட்சியில் நடைபெறுகிறது.

அறிவியல், அரசியல், பிற அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய மேனாடுகளைப் பார்த்து, அனைத்துத் துறைகளிலும் ஒட்டாண்டியாய் ஒடிந்து கிடந்தும் தன் நிலையில், புலியின் வரிகளைக் கண்டு பூனை உடல் மீது சூடு போட்டுக் கொண்டது போல், இந்தியாவும் இத்தகு நிலைகளில், போலி ஆரவாரங்களில் ஈடுபடுவது மிக மிக இரங்கத் தக்கதாகும்! பொது மக்களின் பணத்தை எடுத்து இந்நிகழ்ச்சிகளுக்கெனச் சூறையாடுவது மிகமிகக் கொடுமையும் ஒருவகையில் ஏமாற்றுதலும் ஆகும்!

கூன்விழுகின்ற நிலையில் பணிசெய்யும் தொழிலாளர்களுக்குப் பொழுதுபோக்கு இல்லை. உண்டு கொழுத்து உறங்கிக் கொண்டிருக்கும் மண்டுப் பயல்கள் கண்டு களிப்பதற்கெனப் பள்ளி, கல்லூரிகளுக்கு மூன்று நாட்கள் விடுமுறை! அதற்கெனப் பாட்டாளித் தோழர்களின் பணம் இறைப்பு! என்னே முதலாளிய ஆளுமை!

பாட்டாளித் தோழர்களே-சிந்தியுங்கள்!

தென்மொழியின்தனித்தமிழ் வெளியீடுகள்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்

புதுமுறை இலக்கியங்கள்

1.	எண்சுவை எண்பது	(அச்சில்)
2.	பாவியக்கொத்து (2 தொகுதிகள்)	(அச்சில்)
3,	ஐயை (முதல் பகுதி)	4—00
4.	ஐயை (இரண்டாம் பகுதி)	5—50
5.	கொய்யாக்கனி (மறுபதிப்பு)	9—50
6.	கற்பனை ஊற்று - கட்டுரைகள் 1, 2	(அச்சில்)
7.	பள்ளிப் பறவைகள் (2-ஆம் பகுதி)	4—00
8.	பள்ளிப் பறவைகள் (2-ஆம் பகுதி)	(அச்சில்)
9.	மகபுகுவஞ்சி (மறுபதிப்பு)	(அச்சில்)
10.	கனிச்சாறு (முதல் தொகுதி)	15—00
11.	கனிச்சாறு (இரண்டாம் தொகுதி)	11—00
12.	கனிச்சாறு (மூன்றும் தொகுதி)	17—50
13.	நூறாசிரியம் (முதல் பகுதி)	2—50
14.	நூறாசிரியம் (இரண்டாம் பகுதி)	3—00
15.	தன்னுணர்வு (மறுபதிப்பு)	(அச்சில்)
16.	இளமை உணர்வுகள்	1—25
17.	பாவேந்தர் பாரதிதாசன்	(அச்சில்)
18.	இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	1—25
19.	வாழ்வியல் முப்பது	0—75
20.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	2—25
21.	உலகியல் நூறு	6—50
22.	அறுபருவத் திருக்கூத்து	(அச்சில்)

பிற வெளியீடுகள்

1.	சிங்கள அமர்க்களம். (சொல்லாய்வறிஞர் ப. அருளி)	5—00
2.	இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும் (சிந்தனைச்செம்மல் கு. ச ஆனந்தன்)	1—50

பிற விளக்கங்களுக்கு :

தென்மொழி, சென்னை-5. தமிழகம்.

தோன்றி விட்டது தமிழ் நிலம்!

தோன்றி விட்டது தோன்றி விட்டது!
தோன்றி விட்டது தமிழ்நிலம்—இனத
தொண்டர் தம்முளம் உவகை பூத்திடத்
தோன்றி விட்டது தமிழ்நிலம் [தோன்றி]

தாழ்வு நீக்கிட இழிவு போக்கிட
தமிழர் பண்பினைக் காத்திட—நம்
தோளு யர்த்திடத் துணிவு தந்திடச்
சொந்த நம்மர செய்திட [தோன்றி]

மாண்ட நம்மினப் பெருமை யாவையும்
மீண்டும் பெற்றிடப் போரிட—முன்
ஆண்ட இவ்வினம் மீண்டும் ஆண்டிடத்
தூண்டித் தன்னுணர் வூட்டிட [தோன்றி]

தூய செந்தமிழ் ஓங்கி வாழ்ந்திடச்
சார்திருத்திட நம்கலை—மிகத்
தீய அரசியல் ஏய்ப்பைத் தாக்கிடத்
துன்பம் என்பவை நீக்கிட [தோன்றி]

மாந்தர் தம்பகுத் தறிவை மாய்த்திடும்
மதமும் சாதியும் தீய்த்திட—நல்
ஏந்து தந்திடும் அறிவுப் பாதையில்
எம்மி னம்நடை போட்டிட [தோன்றி]

இந்த வுலகினி மீண்டும் தமிழரை
எடுத்துக் காட்டிப் பேசிடும்—உயர்
அந்த நன்னிலை கொண்டு வந்திட
அரும்பி விட்டது தமிழ்நிலம் [தோன்றி]

வாழ்க! தமிழ்நிலம் வாழ்க! தமிழ்நிலம்
வாழ்க! தமிழ்நிலம் வாழ்கவே!—அதை
வந்தவர் கண்டு நடுங்கி ஒடுங்கிட
வாழ்க! தமிழ்நிலம் வாழ்கவே !! [தோன்றி]

-பாவலர். கொ. செ. சின்னப்பனார்

'பெரியார் சதுக்கம்' என்று பெயரிடுக!

நெய்வேலி உ. த. மு. க. கிளை கோரிக்கை!

நெய்வேலி. நவ. 14—

தென்னார்க்காடு மாவட்டம் நெய்வேலி நகரில் "கிடங்குச் சாலை சந்திப்பு (STORE ROAD JUNCTION) என்று வழங்கப் பெறும் பகுதியை, "பெரியார் சதுக்கம்" என்று வழங்க வேண்டும் என்று, உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் நெய்வேலிக் கிளை, — நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன நகரிய ஆளுமையர்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக, நெய்வேலி உ. த. மு. க. கிளைச் செயலர் திரு. சின்னத்துரை அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

"நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன எல்லையில், பொதுத் தொண்டில் பழுத்த பழமாகிய தந்தை பெரியார் சிலை வைக்கப் பெற்றுள்ள சதுக்கப் பகுதி, தொடக்கத்திலிருந்து கிடங்குச் சாலை சந்திப்பு (STORE ROAD JUNCTION) என்றபடியாகவே வழங்கப் பெற்று வருகின்றது. பெரியார் சிலை வைத்த பின்னர், இச்சதுக்கத்தை "பெரியார் சதுக்கம்" என்று குறிப்பிடுதல் பொருத்தமாக அமையும். எனவே, இப்பகுதியைப் பெரியார் சதுக்கம் என்றே அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

அடுத்து நம் நகரின் நடுவண் பேருந்து நிலையம், C. B. S. (CENTRAL BUS STAND) என்றே வழங்கப் பெறுகின்றது. ஓர் அறிஞரின் பெயரால் இந்நிலையம் சுட்டி அழைக்கப் பெற்றால், நெய்வேலி எண்-2 பேருந்து நிலையத்திலிருந்து வேறுபடுத்திப், பொது மக்கள் உணர்ந்துகொள்ள வசதியாய் இருக்கும், எனவே அருள்கூர்ந்து, நம் தமிழறிஞர்கள் தமிழ்க் கடல் மறைமலையடிகள், தமிழ்த்தந்தை தேவநேயப் பாவாணர், தமிழ்த் தென்றல் திரு. வி. க. பாவேந்தர் பாரதிதாசனார் ஆகியோர் பெயர்களில் ஒருவர் பெயரைச் சூட்டுமாறு, நகர ஆளுமையர் என்ற நிலையில் தாங்கள் விரைந்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மிக்க அன்புடன் வேண்டுகிறோம், அறிஞர்களை மதிக்கவும், பொது மக்கள் எளிதில் வசதியாகப் புரிந்து கொள்ளவும், இப்பெயர் மாற்றங்கள் பயன்படும்." —இவ்வாறான வேண்டுகோளை நெய்வேலி நகரிய ஆளுமையர்க்கு, உ. த. மு. க. நெய்வேலி கிளையின் செயலாளர் **ச. சின்னத்துரை** அவர்கள் விடுத்துள்ளார்.



தெ. ஆ. மாவட்ட வளவனூர் கிளை உ. த. மு. க. தொடக்க விழா :

உலகத் தமிழின முன்னேற்றக் கழக தெ. ஆ. வடக்கு மாவட்ட வளவனூர் - கிளை தொடக்கவிழா, தி.பி. 2013, கன்னி 8, (25-10-82) அன்று, வளவனூர் கோயில் திடலில் சிறப்பாக நிகழ்ந்தது.

வளவனூர் உ, த. மு. க. கிளைக் கழகத் தலைவர் வழக்கறிஞர் திரு. மா. சீ. ஆற்றலரசு க.இ.,க.இ. அவர்கள் தலைமை தாங்கினர். கிளைச் செயலாளர் திரு. அ. நெடுமாறன் வரவேற்புரையாற்றினர்.

வடக்கு மாவட்டத் தலைவர். திரு. தமிழவேள், தெற்கு மாவட்டப் பொருளாளர் திரு. அ. நக்கீரன், பண்ணுருட்டி நட. இராசேந்திரன், திரு. தி. பழனிச்சாமி, திரு. எ. கிருட்டிணமூர்த்தி, புலவர். திரு. தா. மு. கிருட்டிணன் ஆகியோர் வாழ்த்துரை செய்தனர்.

பின்னர், புதுக்கோட்டை மாவட்டச் செயலர் திரு. இரா. பாவாணன் அவர்கள் உ. த.மு.க. கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினர். புதுவை மாநில உ. த.மு.க. அமைப்பாளர், வழக்கறிஞர் திரு. ப. அருளி அவர்கள் உரைநிகழ்த்தினர். அடுத்து சேலம் - செல்வி அருள்மொழி அவர்கள் இன எழுச்சி உரை நிகழ்த்தி அவையோரை மகிழ்வித்தார்.

இறுதியில், உ. த, மு. க. முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் ''தமிழக மக்கள் ஏழ்மையிலும் அறியாமையிலும் அழுந்திக் கிடக்கின்றனர், அவர்களை அறிவூட்டி உயர்த்த நாம் அயராது பாடுபடவேண்டும்'' என்ற அடிப்படைக் கருத்தைச் சிறக்க விளக்கி கொள்கை விளக்கம் செய்து விழிப்பூட்டினார்கள்.

• வளவனூர் - கிளை உ. த. மு. க. பொருளர் திரு. சீ. மணவழகன் க. மு., அறி. இ. அவர்கள் நன்றி கூற, இரவு 12-30 மணியளவில் விழா இனிதே நிறைவெய்தியது.

"உலகியல் நூறு" - வெளியீட்டு விழா !

தி. பி. 2013 துலை (ஐப்பசி) 12, (29-10-82) வெள்ளியன்று மாலை 6 - மணியளவில், திருப்பூர், தேவாங்கபுரம் பள்ளியில், உ.த.மு.க. முதல்வர், பாவலரேறு ஐயா அவர்களின் 'உலகியல் நூறு' என்னும் மிகச்சிறந்த ஓர் அற இலக்கிய நூல் வெளியிடப் பெற்றது. இந்நூல் வெளியீட்டு விழாவினை, திருப்பூர் நகர உ. த. மு. க. கிளையின் பொறுப்பாளர்கள், பெரியார், கோவை மாவட்டத்திலுள்ள 'பெருஞ்சித்திரனர் நூல் வெளியீட்டுக் குழுவினர், ஆகியோர் முன்னின்று சிறப்புற நடத்தினார்கள். நீறணி பவளக்குன்றன் தமிழ் வாழ்த்துப் பாடினர். இந்த அரிய நூலின் வெளியீட்டு விழாவிற்குப் பேராசிரியர். கு. வெ. கி. ஆசான் அவர்கள் (உ. த. மு. க. மாவட்டத் தலைவர்) தலைமையேற்ருர். திரு. தமிழன் வணி.இ. தலைவரை முன் மொழிந்தார். திரு. மு. துரையரசு வணி. மு. வழிமொழிந்தார். தென்மொழி ப. துரையரசன் க. இ. வரவேற்புரையாற்றினர். தென்மொழி ந. முத்துக்குமரன் அறி.இ. அவர்களின் தொடக்கவுரைக்குப் பின்னர், விழாத் தலைவர் தலைமையுரையாற்றினர்.

பேராசிரியர். இலெ.செ. கந்தசாமி க.மு. அவர்கள் 'உலகியல் நூறு' நூலினை வெளியிட்டு அரிய உரை செய்தார். புன்செய் புளியம்பட்டி மறைமலை அடிகள் மன்றச்செயலர் புலவர். திரு. கா. இளமுருகன் க.மு., ப. இ., வ. ப. ப. அவர்கள் நூலைப் பெற்று மகிழ்ந்து மிகச்சிறந்த ஏற்புரையாற்றினர்.

அடுத்து, திருப்பூர் திரு. இரகுநாதன், திரு. முருகு பல்லடம் வட்ட உ.த.மு.க செயலர் திரு. திருமேனி. திரு, நீறணி பவளக்குன்றன், உ.த.மு.க. மாவட்ட பொருளர் திரு. மா. ஆறுமுகம் ஆகிய செந்தமிழ் நெஞ்சினர் சார்புரையாற்றினர்.

திரு. க. வெள்ளிமலை அவர்களின் நன்றியுரைக்குப் பின்னர் விழா இனிது நிறைவெய்தியது.

உ.த.மு.க. சென்னை செங்கழுநீர்ப்பட்டு வட்ட அமைப்புக்கூட்டம்

—சென்னை

கடந்த 13-10-82 ஞாயிறு அன்று மாலை 4-30 அளவில் சென்னை தேவநேயப்பாவாணர் மாவட்ட நடுவண் நூலகக் கட்டட அரங்கில் சென்னை-செங்கழுநீர்ப்பட்டு ஆகிய பகுதிகளுக்கான உ.த.மு.க. வட்ட அமைப்புக் கூட்டம் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைக் கழகத் தலைவர் ஏ. ஏசு. மணவைத் தம்பி, பொறியாளர் ப. தண்டபாணி, தமிழர் முன்னணி தலைவர் கா. பாண்டியன், 'இசுமி' மாத இதழ் ஆசிரியர் இ. பதுருத்தீன், தமிழ் நாடு பிற்படுத்தப்பட்டோர் அலுவலர் தலைவர் பாவலர். பாட்டாளி பழனியப்பன் ஆகியோரும் இந்த அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்றமை குறிப்பிடத் தகுந்ததாகும்.

இந்த அமைப்புக் கூட்டத்தில், சென்னை மாவட்டம் என்பது வடசென்னை தென்சென்னை என இரு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்று, அமைப்புக் கூட்டத்திற்கு வந்த தமிழன்பர் களில் விருப்பமும் தகுதியும் நிறைந்த தொண் டர்கள் சிலர், தலைவர், செயலர், பொருளர், ஆகிய பதவிகளில் அமர்த்தப்பெற்றனர். தொண்டு வாய்ப்பை வசதிப்படுத்திக் கொள் ளும் நிலையில், முன்னரே அமர்த்தப்பெற்ற ஒரு சிலர், மாற்ற அமர்த்தம்பெற்றனர். செங்கழு நீர்ப்பட்டு மாவட்டத்திற்கும் உரிய பொறுப் பாளர்கள் அமர்த்தப்பெற்றனர்.

அமைப்புக் கூட்டத் தொடக்கத்தில், கழக முதல்வர் ஐயா அவர்கள் அமைப்பையும் அமர்த்தத்தையும் பற்றிய விளக்கவுரையை ஆற்றினர். இறுதியில், புலவர். திரு. இறைக் குருவனர் அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார். கூட்டம் இனிதே நிறைவேறியது.

அமைப்புக் கூட்டத்திற்கு வந்திருந்தோர் அனைவர்க்கும் வில்லிவாக்கம் திரு. வை. செய ராமன் அவர்கள் குளம்பி ஏற்பாடு செய்து வழங்கியது இங்குக் குறிப்பிட . வேண்டிய தாகும்.

தமிழ் நாளிகை (தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு !

அழகிய எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் நடைமுறை எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாளிலும் தமிழ், தமிழின, தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று. வரும் திசம்பர் முதற் கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி அழகிய படத்துடன் கூடிய இருவண்ண நாளிகை வெளி வருகிறது.

விலை, விளக்கம் பின்னர்,
தேவையானவர்கள் முன்கூட்டியே
எழுதுக !
விற்பனையாளர்களுக்குத்
தக்க கழிவு கொடுக்கப்பெறும்.
உ. த. மு. க. மே\பா தென்மொழி,
சென்னை—5.

தமிழ் நிலம் வாழியவே !

நினைவுக்கலை ஏந்தல் பெ. இராமையா
பதின்கவனகர் (தசாவதானி)

உண்மைத் தமிழ்மொழி இதுவென் றனைவரும்
உணரச் செய்பவராம்
உலகத் தமிழின முன்னேற் றத்தினை
உயிராய் நினைப்பவராம்
திண்மைக் கருத்தினைத் தெளிவாய் நயமுற
செப்பும் திறத்தினராம்
சிந்தைக் கினியநல் அறிவைத் தனித்தமிழ்
செழிக்கத் தருபவராம்
வண்மைக் குணத்தொடு மானம் பெரிதென
வாழும் வலிமையராம்
மாற்றார் கொடுமையை அஞ்சா தெதிர்த்திடும்
வாய்மைப் புரவலராம்
தண்மைக் கடலன பெருஞ்சித் திரரெனும்
சான்றோர் வாழியவே !
தக்கோர் துணையுடன் அவர்தான் விளைந்திடு
தமிழ்நிலம் வாழியவே !
தமிழ்நிலம் ஒன்றே தமிழனுக் குரிய
தாயகம் என்பதுவும்
தமிழ்நிலம் ஒன்றே தமிழனுக் குயிராம்
தன்மைய தென்பதுவும்
தமிழ்நிலம் ஒன்றே முதன்முதல் மாந்தர்
தளிர்த்த இடமெனவும்
தமிழினம் ஒன்றே அறநெறி போற்றும்
தகைமைய தென்பதுவும்
தமிழ்நிலம் ஒன்றே மறமொடு மானம்
தனில்வுயர் வென்பதுவும்
தமிழ்மொழி ஒன்றே இலக்கண இலக்கியம்
தழைத்திடும் பொழிலெனவும்
தமிழ்நிலம் ஒன்றே அறிவியல் போற்றும்
தலைமைய தெனமுழங்கும்
தமிழ்நிலம் வாழிய தமிழ்நிலம் வாழிய
தமிழ்நிலம் வாழியவே !

உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற. மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்,

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண். TN/MS(C)\657

அனுப்புதல்;
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனர், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், சென்னை-5.